## ஞாலகுருவின் படைப்புக்கள்

# தொண்டர்களைத் திரட்ட வேண்டியதே நம் பணி

ஓம் குருவே போற்றி! ஓம் குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,121 **ஆவணி** மாதம்.

## இந்து இலக்கியக் கழக வெளியீடு

காணிக்கை: ரூ 10/-

# <u>உள்ளுறை</u>


1. **“தொண்டர்களைத் திரட்ட வேண்டியதே நம் பணி!”** - குருதேவர் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் நாமக்கல்லைச் சேர்ந்த மாணுக்கர் சித்தரடியான் திரு பொன்னுசாமி அவர்களுக்கு 1986இல் எழுதிய நெடிய அஞ்சல்.

2. **“பிறம்மயோகிக்கான பயிற்சி முறைகள்”** - குருதேவர் அவர்களால் தயாரிக்கப்பட்ட ஐந்தாவது பிறம்மயோகியாகிய மதுரைச் சித்தரடியான் திரு M.S.R.மாரியப்பன் அவர்களுக்கு 1986இல் குருதேவர் விடுத்த செயல்விளக்கத் திருவோலை.

3. **“குறளியம் பத்திரிகைக்கு எழுதப்பட்ட மடல்”** - *‘குறளியம்’* என்ற பத்திரிகையின் ஆசிரியருக்கு வேம்பைச் சித்தரடியார் திரு சீ.மணி அவர்கள் 1986இல் எழுதிய நெடிய கருத்து விளக்கச் சிந்தனைக்குரிய கண்டிப்புத் திருவோலை அஞ்சல்.

# தொண்டர்களைத் திரட்ட வேண்டியதே நம் பணி

தலைமைப்பீடம்,
செம்பியம்,
16.8.86.

அருள்மிகு சித்தரடியான் பொன்னுசாமி அவர்கள் சமூகத்துக்கு ஞாலகுரு சித்தர் கருவூரார் விடுக்கும் மடல்:

அருள்மிகு திருவருட்செல்வர் ஞானி கோபால் பிள்ளை அவர்களுக்கு வாழ்த்தும், பாராட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அவர் பல ஆண்டுகளுக்கு முன்னரே பீடாதிபதியோடு இரண்டறக் கலந்து விட்டவர். அவர் குருவைப் பெற்றும் கருவை வெல்ல முடியாத நிலையில் இருக்கிறார். அவ்வளவுதான். அவர் அடிக்கடி குருவோடு வந்து கலந்து அருட்பெருஞ்சோதியாய் விளங்குகிறார். பகலில் ஏற்றி வைத்த விளக்குப் போல் அவரின் அருளொளி உலகியலால் இருந்த இடம் தெரியாமல் இருக்கிறது. இனியும் அவர் இப்படியே இருப்பது அழகல்ல. அவர் தலைமைப்பீடத்தின் ஒப்புதலைப் பெற்று ஞானாச்சாரியாரோடு உடனே தொடர்பு கொண்டு தங்களுடைய மனைவியைக் காப்பாற்றிக் கொடுத்தது மிகமிகச் சாதாரண செயலே.

அவர் நமது தாயக மக்களின் அகவாழ்விலும், புறவாழ்விலும் கவிழ்ந்து கிடக்கின்ற காரிருளை முழுமையாக அகற்றக் கூடிய ஓர் ஆதவன். அந்தச் சிலை வடிக்கும் சிற்பி மக்களின் கவலைகளை யெல்லாம் அகற்றி நலம் விளைவிக்கும் அருள்மருத்துவராக மாற வேண்டும், வளர வேண்டும். அந் நன்னாளே தாயகத்தின் பொன்னாள். அந்நாள் எந்நாள் என்பதை முடிவு செய்ய வேண்டியது அவரே.

அவர் விரைந்து தங்களுடனே, மாரப்பக் கவுண்டருடனே தலைமைப்பீடம் வந்து ஒரு நாளிரவாவது தங்கிப் பூசைகளைச் செய்து தயாராகலாம். அவர் சிலைகளை வடிப்பதை விட அருளுலகில் மக்களுக்கு நலம் விளைவிக்க வாழ்ந்திடலாம்.

நண்ப! எம்மை அருளுலகக் கருவறையின் மூலவராக செதுக்கி உருவாக்கிய தலைமைச் சிற்பிதான் எமது தந்தை. ஆனால் அந்தத் தலைமைச் சிற்பியின் கீழ் ஆயிரமாயிரம் சிற்பிகள் அல்லும் பகலும் உழைத்துத்தான் எம்மை உருவாக்கினார்கள். இதனை யாம் இங்குக் குறிப்பிடுவதற்குக் காரணம்; மண்ணவர்களும், விண்ணவர்களும் எம்மை அருளுலகக் கருவறையின் மூலச் சிலையாகச் செதுக்கியமைக்கு நன்றி தெரிவிக்கும் வண்ணம்தான்; யாம் பல புதியபுதிய அருளுலகக் கருவறைகளையும், கருவறை மூலச் சிலைகளையும் உருவாக்குகிறோம். தங்களையும், தங்களைப் போன்று பல நூறாயிரக்கணக்கான சிலைகளையும் அருளுலகக் கருவறைகளின் மூலவர்களாக உருவாக்கித்தான் அருளாட்சி ஆறுகப் பெருக்கெடுத்து வரச் செய்துள்ளோம்.

ஆனால், பெரும்பாலான கருவறைகள் சொந்தபந்தங்களாலும், சுயநல உணர்வுகளாலும் தங்களைத் தாங்களே தளையிட்டுக் கொண்டு இருட்டறைகளாக மாறிவிட்டன. எனவேதான் எமது முயற்சிகள் கடலில் பெய்த மழையாக, காட்டில் காய்ந்த நிலவாக, பாலையின் மணலிலே போட்ட கோலங்களாக எதிர்பார்த்த பயன்களை விளைவிக்கவில்லை என்று கூறிச் செல்லத் தயாராக இல்லை யாம். தொடர்ந்து தன்னம்பிக்கையோடு, அறிவு விழித்த நிலையில் மானுடர்களிலிருந்து அருளாளர்களையும், 48 வகையான வழிபடு நிலையினர்களையும் (கடவுள்களையும்) உருவாக்கிக் கொண்டுதான் இருக்கிறோம். எத்தனையோ இராமகிருட்டிணர்களும், விவேகானந்தர்களும், நாயன்மார்களும், ஆழ்வார்களும் உருவாகி நிலவறைப்

புதையல்களாகவும், அடர்காட்டிடைப் பயிராகவும், தனிமரங்களாகவும் மாறியிருக்கிருர்கள். என்ன செய்வது?!

எம்மை உருவாக்கியவர்களும் மோன மௌன ஞானிகளாகி விட்டார்கள். யாம் உருவாக்கியவர்களும் மோன மௌன ஞானிகளாகி விட்டார்கள். இருந்தும், யாம் புற்றீசல்கள் போல் அருளாளர்களையும், அருளூறு நிலையங்களையும் தொடர்ந்து உருவாக்கிக் கொண்டுதான் இருக்கிறோம். யாம் நமது தாயகத்தைத் தவிர வேறு எந்த நாட்டிலும் தோன்றியிருந்தாலும் மிகமிகப் பெரிய சாதனைகளைச் சாதித்திருக்க முடியும். இருந்தாலும் யாம் எமது தாயகத்தையும், தாயகத்து மக்களையும் மிகமிகப் பெரிய அரிய அளவில் விரும்புகிறோம், நம்புகிறோம்.

எனவே, நமது அருள்மிகு ஞானியார் கோபால் பிள்ளையை குறுகிய வட்டத்தை விட்டு வெளிக் கிளம்பி தத்துவங்களையும், சித்தாந்தங்களையும் வாரிவாரி வழங்கும் கொடையாளியாக மாறச் சொல்லுங்கள். அவருடைய வேள்விப் பயனால் அன்னை நிலமும், உலகும் நலம் மேலும் பெறட்டும். சிலையை மிகக் குறைந்த செலவில் செய்து தருவதாகக் கூறியதற்கு நன்றி, பாராட்டு. யாம் அவரிடம் இருந்து சிலைகளை மட்டும் எதிர்பார்க்கவில்லை. அவரையே ஓர் எழுந்தருளிச் சிலையாக எங்கும் அனுப்பிச் செயல்பட விரும்புகிறோம். புரிந்தால் புரிந்து, விரும்பினால் விரும்பி செயல்படட்டும். இதனை அவருக்குப் படித்துக் காட்டுங்கள். எமக்கு சில நகல்களையும் அனுப்புங்கள். பலருக்கும் இதன் நகல்களை அனுப்புங்கள். அவரை யாம் அறிவோம். ஆனால், அவர் என்னை அறிந்தும் அறியாமல் இருக்கிறார்.

நமது நண்பர் மாரப்பக் கவுண்டர் அவர்களுக்குப் பொருளுலகப் பாதுகாப்புகள் அனைத்தும் கொடுக்கப்பட்டு விட்டன. அவரும்

நிறைவோடும், மகிழ்ச்சியோடும் சென்றுள்ளார். அவரை அடிக்கடி சந்தித்து நாம் அச்சிட்டு உள்ளவைகளைப் படித்துக் காட்டி விளக்கம் வழங்குங்கள். தாங்கள் எதிர்பார்க்கின்ற இயக்க வளர்ச்சி விரைந்தும் விரிந்தும் அவரால் உருவாகும். கவலை வேண்டாம்.

முக்கியமான கோவில் சன்னிதிகளில் நமது வெளியீடுகளை விற்க முற்படுங்கள். **நாம் சித்தர் நெறியினைக் கூறிடும் தத்துவ நாயகங்களாகத்தான் விளங்க வேண்டும்; வளர்க்க வேண்டும். அப்படி இல்லாமல் நம்மைக் குறிகாரர்களாகவோ, மந்திரவாதிகளாகவோ விளக்கி விடக் கூடாது, வளர்த்து விடக் கூடாது**. எச்சரிக்கை. ஏனெனில், நமது தத்துவம் அண்டபேரண்டம் ஆளுகின்ற ஒரு மாபெரும் தத்துவமாகும்.

நமது ஆற்றல் பிண்டங்களின் முற்பிறப்புக்களையும், மறுபிறப்புக்களையும் கணிக்க வல்லதாக இருந்த போதிலும் நாம் அமைதியாகவும், அடக்கமாகவும் செயல்பட வேண்டும். தாங்கள் பொறுப்பாகவும், பொறுமையாகவும் பொதுமக்களுக்கு போதிய விளக்கங்களை வழங்கிடுங்கள். எமது நாமக்கல் வருகை கொங்கு நாடு முழுவதும் அருளுலக மறுமலர்ச்சிக்கும், வளவளர்ச்சிக்கும் பயன்படுவதாக இருக்கட்டும்.

யாம், இப்போது விசுவாமித்திரர் புராணம், யக்ஞவல்லி இராமாயணமான சித்தர் இராமாயணம், குருபாரம்பரியச் செல்வங்கள் என்ற தலைப்புகளில் கட்டுரைகள் பல எழுதியுள்ளோம். இவை அருளுலகை அறிவு விழித்த நிலையில் வளவளர்ச்சியும், ஆட்சிமீட்சியும் பெறச் செய்திடும். ஏனெனில், நமது மதத் துறையில் உள்ள இருட்டு நிலைகளும், குருட்டு நிலைகளும், திருட்டு நிலைகளும், மருட்டு நிலைகளும்; அறிவு விழித்த நிலையில் செயல்படக் கூடிய அருளாளர்களால்தான் அகற்றப்பட முடியும் என்பதுதான் உண்மை.

இதற்கு அருளுலகில் உள்ள ஆபாசக் கற்பனைகளையும், அண்டப் புளுகுகளையும், சுரண்டல் போக்குகளையும், முதலாளித்துவ ஆதிக்கங்களையும், ஏதேச்சாதிகாரங்களையும் அகற்றிடல் வேண்டும். அதற்காகத்தான் நமது புராணங்களையும், இதிகாசங்களையும், பதினெண்சித்தர்களின் இலக்கியங்களின் அடிப்படையில் மெய்யான வடிவம் பெறச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். எம்மால் அருளுலகத்தில் புதுக் குழப்பங்களோ, போட்டி பொறுமைகளோ, போராட்டங்களோ, போர்களோ உருவாகிடாது! உருவாகிடாது! உருவாகிடாது!

ஏனெனில், இவ்வுலகில் தோன்றியுள்ள அனைத்து அருளாளர்களும் அவர்களின் தத்துவங்களும், அவர்களின் பெயரால் உள்ள மதங்களும் சித்தர்நெறியின் தோட்டத்தில் பூத்த மலர்களாகவும், பழுத்த கனிகளாகவும்தான் இருக்கின்றன. அனைத்து மதங்களுக்கும் முதல் கோயிலாக, மூலக் கோயிலாக விளங்குபவை பதினெண்சித்தர்களாலும், பதினெட்டாம்படிக் கருப்புகளாலும், இவர்களின் கருவழி வாரிசுகளாலும், குருவழி வாரிசுகளாலும் உருவாக்கப்பட்டவையே தவிர வேறொன்றுமில்லை. எனவே, எந்த மதத்தோடும் நமக்கு மாறுபாடுமில்லை, வேறுபாடுமில்லை, முரண்பாடுமில்லை.

இதேபோல் எந்த அருளாளர்களின் சாதனைகளிடத்தும், போதனைகளிடத்தும் நமக்கு மறுப்போ, வெறுப்போ இல்லை. அதாவது அனைத்து மதத்தவர்களும் தங்கள் தங்களின் மதவழியே ஒழுகி பத்திநிலைகளிலும், சத்திநிலைகளிலும், சித்திநிலைகளிலும், முத்திநிலைகளிலும், சித்துவிளையாடல் நிலைகளிலும் தேர்ந்திடுவதற்கு நமது தத்துவமும், நாமும் வழியாகவும், வழிகாட்டியாகவும் விளங்குகின்றோம்.

ஆனால், அருளுலகில் சர்வாதிகாரம் செலுத்தி வரும் ... ... ... முதலாளிகளும், சுயநலக்காரர்களும் ... ... ... ... *[சில சொற்கள்*

*நகலில் தெளிவாகத் தெரியவில்லை.]* அரசியல்வாதிகளும், சில மதவாதிகளும் நமது பணிகளுக்கு பொய்யான, தவறுன விளம்பரங்களை வழங்குகிறுர்கள். இந்நிலை மாற வேண்டும். இது குறித்து அவசர, ஆத்திர முடிவுகள் எதுவும் எடுக்கப்பட்டு விடக் கூடாது.

சேலம் மாவட்ட வேம்படிதாளத்தைச் சுற்றியுள்ளவர்களும்; நாமக்கல்லில் தங்களைச் சுற்றியுள்ளவர்களும்; கோவை மாவட்டச் சிறுமுகையிலும், திருச்சி முசிறியிலும், தஞ்சையிலும், மதுரையிலும், கொட்டாம்பட்டியிலும், நெல்லையிலும், காரைக்குடியிலும் உள்ளவர்களும்; வடஆற்காடு மாவட்ட வேலூரில் உள்ளவர்களும் பேராற்றலோடும், பேரார்வத்தோடும் புதியபுதிய நிறுவனங்களையும், நிருவாகங்களையும் தொடர்ந்து உருவாக்கிச் செயல்பட வேண்டும்.

நமது தலைமைப்பீடமாக சென்னை செங்குன்றம் காரனோடைக் கிராமத்தில் உருவாகி வரும் கோசலையாற்றங்கரைக் கருகுலம் விரைந்தும் விரிந்தும் வடிவப்பட்டிட, வாழ்வு பெற்றிட நம்மவர்கள் அனைவரும் பலரையும் அணுகித் தேவையான வசதிவாய்ப்புகளை உருவாக்கித் தாருங்கள். பல்வேறு காரணங்களால் யாம் அடிக்கடிச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிட இயலவில்லை. எனவே, யாம் தலைமைப்பீடத்தில் இருக்கும்போது கோசலையாற்றங்கரைச் சித்தர்நெறிக் கருகுலத்தில் அடிக்கடி தங்கி அ.வி.தி. பணியாற்றினுல் அருளுலக வறுமைகளையும், வெறுமைகளையும், மாயங்களையும், மயக்கங்களையும், தயக்கங்களையும், பயனற்றவைகளையும், கறைகளையும், குறைகளையும் கூடுமானவரை அகற்றும் பணியைச் செய்ய முடியும்.

மேலும், பகுத்தறிவுப் பகலவன் சிறைக்கஞ்சாச் சிங்கம், சிந்தனையூற்று, சீர்திருத்தச் சிற்பி, தமிழினத் தந்தை, வெண்தாடி வேந்தர், தந்தை பெரியார் ஈ.வெ.ரா.வின் தத்துவங்களுக்கும், சித்தாந்தங்களுக்கும், செயல்வடிவங்களுக்கும் முழுமையான பயன் ஏற்படாமல் கெடுதல்

செய்யும் போலி நாத்திகர்களையும், அவசரக்காரப் பகுத்தறிவுவாதிகளையும், ஆத்திரக்காரச் சீர்திருத்தவாதிகளையும் செம்மைப்படுத்துவதற்காக; மதவரலாறுகளையும், அருளாளர்களின் போதனைகளையும், சாதனைகளையும், சாத்திறச் சம்பிறதாயச் சடங்குகளையும், பூசைமுறைகளையும், விஞ்ஞானச் சூழலில் பகுத்தறிவுப் போக்கில் விளக்கிடும் அஞ்சல்களையும், கட்டுரைகளையும் நூற்றுக்கணக்கில் எழுதிக் குவித்துக் கொண்டே இருக்கிறோம். இதனால்தான் யாம் மற்ற அருளாளர்களைப் போல் விரைந்தும் விரிந்தும் வெளியுலக வளர்ச்சிகளைப் பெற முடியவில்லை. அதைப் பெறவும் விரும்பவில்லை யாம்.

கடந்த 500 கோடியாண்டுகளிலே அருளுலகத் தலைமைப்பீடமாக விளங்கும் பதினெண்சித்தர் பீடத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் தோன்றியிருக்கின்ற யாம்; 48 வகையான சித்தர்களையும், 48 வகையான வழிபடுநிலையினர்களையும், 48 வகையான கருவறை மூலவர்களையும், வெட்டவெளிக் கருவறை மூலவர்களையும், 48 வகையான அருளாளர்களையும், அருளாளிகளையும், அருளாடு நாயகங்களையும், 48 வகையான மருளாளர்களையும், மருளாளிகளையும், மருளாடு நாயகங்களையும், பீடாதிபதிவழி ஆச்சாரியார்களையும் உருவாக்கிடும் மாபெரும் பணியிலேயே ஈடுபட்டிருக்கிறோம். இம் மாபெரும் பணிக்காகவே யாம் இலைமறை காயாகவே இருக்கிறோம். எனவே, எமது இந்த நிலைகளையெல்லாம் புரிந்தும் புரியவைத்தும்தான் செயல்பட வேண்டும் தாங்கள். எம்மைக் காட்சிப் பொருளாகவோ, குறிகாரராகவோ, சித்து விளையாடல்காரராகவோ விளம்பரம் செய்து விடாதீர்கள். **எச்சரிக்கை.**

நண்ப! கல்லையும், புல்லையும், மண்ணையும், செம்பையும், பொன்னையும் கடவுளாக்கிடும் கலைஞர்களான பதினெண்சித்தர்களே இம்மண்ணுலகம் மிகப் பெரிய நெடிய இடைவெளிக்குப் பிறகே

சந்தித்து வந்திருக்கிறது. எனவே, சித்தர்களைப் பற்றி இவர்கள் புரிந்து கொள்ளுவது எளிதல்ல. யாமும் நெடிய பெரிய தொடர் பயணங்களை குக்கிராமங்கள் முதல் சிற்றூர்களிலும், பேரூர்களிலும், பெருநகரங்களிலும் நிகழ்த்திக் கொண்டிருக்கிறோம். முன்பெல்லாம் தனிமனிதராக அலைந்து திரிந்தோம். இப்பொழுது உங்களைப் போன்ற ஆயிரமாயிரம் அடியான்களின் துணையோடு இணையிலா சுற்றுப் பயணங்களையும், அருட்பணிகளையும் ஆற்றுகிறோம். ஆனாலும், யாம் எமது சொந்தத் தாயக மக்களிடையே ஓர் அன்னியனாகத்தான் வாழ்ந்து வருகின்றோம்.

பலரும் எமது அருட்பணி விரிவாக்கத் திட்டங்களின் மூலமும், அ.வி.தி. செயல்வீரர்களின் மூலமும் கடந்த 14 ஆண்டுகளாக (யாம் ஒளிவில் ஒடுக்கத்திலிருந்து 1972இல்தான் வெளிவந்தோம்.) ஏராளமான நன்மைகள் அடைந்திருக்கிறார்கள். இவர்கள் மட்டும் குறிப்பிட்ட அளவு நன்றியுடையவர்களாக இருந்திருந்தார்களேயானால்; யாம் எமது மொழிக்கும், இனத்துக்கும், நாட்டுக்கும் ஆற்றத் துடிக்கின்ற பணிகள் அனைத்தையும் மிகப்பெரிய அளவில் வெற்றி பெறச் செய்திருப்போம். சித்தர்நெறியின் உயிர்நாடிக் கொள்கையான உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை அமைக்கும் பணி பெருமளவு ஈடேறியிருக்கும். இதற்கும் மேல் சித்தர்நெறியின் குறிக்கோளான உலக ஆன்மநேய ஒருமைப்பாடு கொள்கையளவிலாவது உலகம் முழுவதும் பரவி இருந்திருக்கும்.

அதாவது, இதுவரை யாம் எழுதிக் குவித்துள்ள ஆயிரமாயிரம் அஞ்சல்களும், நூறாயிரக்கணக்கான கட்டுரைகளும், சித்தர்களின் பழம்பெரும் இலக்கியங்களும் குறைந்தது தமிழ்மொழியிலாவது நூல் வடிவில் அச்சாகி வெளிவந்திருக்கும். அவற்றால் தமிழர்களுக்கிடையில்

உருவாக்கப்பட இருக்கும் அனைத்துவகையான செயல்திட்டங்களுக்கும் உரிய கருநிலைகளும் மிகமிகப் பெரிய வளர்ச்சி நிலைகளைப் பெற்றிருக்கும்.

எனவேதான், கடந்த சில ஆண்டுகளாக யாம் பெரும்பாலும் பொதுமக்களைச் சந்திப்பதை விடத் தங்களைப் போன்ற அருளுலகச் செயல்வீரர்களைச் சந்தித்து அ.வி.தி. செயல்வீரர்களாக, இன்றமிழ் தலைவர்களாக, தமிழ்மொழிக் காவலர்களாக, தமிழின வழிகாட்டிகளாக மாற்றும் பணியினைச் செய்து வருகிறோம். எனவேதான், எமது சுற்றுப்பயணங்களில் ஆடம்பரங்களோ, ஆரவாரங்களோ தேவையில்லை என்று அறிவிக்கிறோம். அத்துடன் தேர்ந்தெடுத்த ஆர்வலர்களையும், ஆதரவாளர்களையும் மட்டுமே சந்தித்து, விவாதித்து விளக்கங்கள் வழங்கி அவர்களை எமது இயக்கச் செயல்வீரர்களாக மாற்றும் பணியில் ஈடுபடவே சுற்றுப்பயணங்களில் மிகுதியாக ஈடுபடுகிறோம்.

ஏனெனில் நமது மொழியையும், பண்பாட்டையும், மதத்தையும் சிதைத்துச் சீரழித்துச் செல்வாக்கிழக்கச் செய்வதன் மூலம்தான் அன்னியர்கள் நம்மிடையே சீரும், சிறப்பும், செல்வாக்கும், முதன்மையும், மேலாண்மையும், தலைமையும், ஆட்சியும் பெற்று வருகின்றார்கள். இவர்கள் எப்பொழுதும் மொழித்துறைக்கும், மதத்துறைக்கும் தங்களுடைய தலைமைகளையே விளம்பரப்படுத்தி பெரியவாள்களை உருவாக்கி வருகிறார்கள். இவர்களுக்கு ஆதரவாக நூற்றுக்குப் பத்துப் பேராக உள்ள படித்தவர்களில் கைக்கூலி பெற்றிடும் தமிழினத் துரோகிகளும் விரோதிகளும் தொடர்ந்து தோன்றிக் கொண்டேயிருக்கிறார்கள்.

எனவே, தமிழின நல எதிரிகளையும், பகைவர்களையும் சந்தித்துப் போரிடுவதற்கு முன்னால் தமிழின நலத்துரோகிகள் விரோதிகளைச் சந்தித்துப் போராடிச் சீர்திருத்தும் பணியில் ஈடுபட வேண்டியிருக்கிறது.

இது மிகமிகச் சிக்கலான, ஆபத்தான, தொல்லையான முயற்சியாகும். ஏனென்றால், நமது எதிரிகளையும், பகைவர்களையும் விட நம்மை அன்னியர்க்குக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளும், விரோதிகளும்தான் எந்த நேரத்திலும் மிகப்பெரிய இழிவையும், அழிவையும் வழங்கக் கூடியவர்கள்.

அதுமட்டுமல்லாமல் நம்மவர்களில் பேராசை பிடித்தவர்களும், பிச்சைக்கார மனம் படைத்தவர்களும், அடிமையுணர்வு மிக்கவர்களும், கூலிச்சிந்தை உடையவர்களும் கணிசமான அளவு இருக்கிறார்கள். இவர்கள் எப்போதுமே அன்னியர்களுக்குக் காவலர்களாக, வேலிகளாக, கங்காணிகளாக, கால் பிடிப்பவராக, செருப்புத் தூக்குபவராக செயல்படத் தயாராக இருக்கிறார்கள். இவர்கள் அவர்கள் கையிலே பிடித்திருக்கும் வேட்டைநாயைப் போன்றே தங்களின் சொந்த மொழியையும், இனத்தையும், நாட்டையும் வேட்டையாடி அன்னியர்களுக்கு உணவுப் பொருள் தருபவர்களாகவே இருக்கிறார்கள்.

எனவேதான், நாம் நம்மிடையே வாழும் மேற்படி வகையினரை இனம் கண்டு எப்படியாவது திருத்த முற்பட வேண்டும். இப்பணிக்குரிய தொண்டர்களைத் திரட்ட வேண்டியதே நம் பணி.

அன்பு

**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

**//உண்மை நகல்//**
**நகல் தயாரிப்பு:- T.பொன்னுசாமி, நாமக்கல்.**

**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு பொன்னுசாமி அவர்களின் கையெழுத்திலும், மற்றவர்களின் கையெழுத்திலுமாக இருந்தது. சில சொற்கள் தெளிவின்மையால் விடுபட்டுள்ளன.//**

# பிறம்மயோகிக்கான பயிற்சி முறைகள்

தலைமைப்பீடம்,
11-8-1986.

அருள்மிகு சித்தரடியான் பிறம்மயோகி MSR மாரியப்பன் அவர்களுக்கு இந்துமதத் தந்தை, குவலய குருபீடம், அரசயோகி, ஞானச்சாரியார், ஞாலகுரு சித்தர் கருவூரார் விடுக்கும் செயல்விளக்கத் திருவோலை.

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே. எல்லாம் அம்மையப்பன் அருளால் இனிய பயன்கள் நல்கட்டும்! நிம்மதியும் நிறைவும் தரட்டும்!

2) பேரன்பிற்கும், பேராதரவிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய MSR மாரியப்பன் அவர்களே! இம்மண்ணுலகு தோன்றி 500 கோடியாண்டுகளில் இந்த இருபதாம் நூற்றாண்டில்தான்; பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியால் பதினெண்சித்தர்கள் கருவழி வாரிசு அல்லாதவர்களையும் 48 வகையான அருட்பட்டங்களுக்கு உரியவர்களாக்கும் முயற்சி மிகப்பெரிய அளவிலும், உலகம் தழுவிய அளவிலும் நிகழ்த்தப்படுகின்றன. இதிலும் புரட்சியாக இதுவரை நான்கு பிறம்மயோகிகள் அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள். தாங்கள் ஐந்தாவது பிறம்மயோகியாக அறிவிக்கப்பட்டிருக்கிறீர்கள். எனவே, தாங்கள் இந்தப் பட்டத்துக்குரிய பயிற்சிகளையும், முயற்சிகளையும் விரைந்தும், விரிந்தும் அக்கறையோடும், ஆர்வத்தோடும் செய்திடல் வேண்டும், செய்திடல் வேண்டும், செய்திடல் வேண்டும் என்று குருவாணை விடுக்கப்படுகிறது.

3) பேரன்புடையீர்! தங்களுடைய ஊழ்வினையும், விதியும், ஆள்வினையும், சூழ்வினையும், குடும்பமும் தங்களை அனைத்து விதமான சத்திகளும், சித்திகளும், முத்திகளும் பெறுவதற்குத் துணையாக

அமைந்திருக்கின்றன. இந்த வகையில் நீங்கள் மிகுந்த யோகக்காரர். உங்களுக்குக் கிடைத்துள்ள இவ்வரிய பெரிய வாய்ப்பு வசதிகளை அன்புகூர்ந்து பயன்படுத்த முற்படுங்கள். எதிலும் தளர்வோ, தாழ்வோ தேவையில்லை. தங்களால் எதையும் செய்ய முடியும் என்ற நிலை அருளுலகத்தாராலும், பொருளுலகத்தாராலும் ஒப்புக்கொள்ளப் பட்டு, ஏற்றுக்கொள்ளப் பட்டுவிட்டது. எனவே, தாங்கள் கைக்குக் கிடைத்ததை வாய்க்குக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். இது உங்கள் உலகியல் வாழ்வை எள்முனையளவு கூடப் பாதிக்காது! பாதிக்கவே பாதிக்காது!

4) **‘ஆயிரம் வேர்களைக் கண்டறிந்தவனே மருத்துவன்; ஆயிரம் பேர்களுக்கு அருள்வழங்குபவனே யோகி’** என்ற குருபாரம்பரிய வாசகக் கருத்தின்படி தாங்கள் மாதாமாதம் ஒவ்வொரு பூசைக்கும் ஆயிரம் பேர்களுக்கு மேல் அருளூறு பூசனைப் பொருள்களை வழங்குபவராக உயர வேண்டும். அதாவது நேரிலோ, அஞ்சல் வழியாகவோ தாங்கள் ஆயிரம் குடும்பத்தார்களுக்கு மேல் தொடர்பு கொண்டு; அருளுலகப் பாதுகாப்புகளை வழங்கி அருட்செல்வராகத் திகழ வேண்டும். அன்புகூர்ந்து இந்தச் செயல்திட்டத்தின்படி செயல்படத் தயாராகுங்கள்.

5) நீங்கள் உங்களுக்கென ஒரு புதிய அ.வி.தி. மையத்தை ஏதேனும் ஓரிடத்தில் துவக்கிக் கொள்ளுங்கள். உங்களுடைய வசதிவாய்ப்புகளுக்கேற்ப ஒவ்வொரு மாதமும் மாதாமாதம் முழுநிலவு நாளிலோ, அதற்கு முன்பின்னாக நான்கு நாட்களுக்கு ஒருநாளையோ பருவபூசைக்குரியதாக அறிவிப்புச் செய்திடுங்கள். அந்தப் பூசை யாகத்தில் நீங்கள் பிறம்மயோகியாகப் பயிற்சி பெறுவதை அறிவிப்புச் செய்யுங்கள். அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம் M.C.இராமனையும், அருள்மிகு தேவதானப்பட்டி காமாட்சியம்மன் சன்னிதானம் செகதீசனையும் உங்களுக்கு நிலையான துணைவர்களாக ஆக்கிக் கொள்ளுங்கள். வரக்கூடிய மக்கள் கூட்டத்தைப் பொறுத்து உங்கள்

விருப்பத்திற்கேற்ப நமது அ.வி.தி. செயல்வீரர்களைத் துணைக்கு அழைத்துக் கொள்ளுங்கள்; அல்லது புதிய அ.வி.தி. செயல்வீரர்களை உருவாக்குங்கள் குருதேவரின் ஒப்புதலோடு.

இப்பிறப்பை தன்னம்பிக்கை இல்லாததாலோ, தளர்ச்சியாலோ, தயக்க மயக்கங்களாலோ வீணுக்கிட வேண்டாம். துணிந்து செயல்படுக. என்றைக்கும் வெற்றி உங்களுடையதே! வாழ்க! வளர்க!

6) ஐயா! எந்தக் காரணத்தை முன்னிட்டும் தங்களுக்குப் பொருளாதாரப் பாதிப்புகள் வந்துவிடக் கூடாது. எனவே, யாராக இருந்தாலும் ரூ.2/- (இரண்டு ரூபாய் மட்டும்) உங்களுக்கு அனுப்பி அவர்களின் குடும்ப நலன்களுக்காக, மந்திரவாதிப் பாதிப்புகளுக்காக, தற்காப்புக்காக, நாள் கோள் மீன் பாதிப்புப் பரிகாரத்திற்காக உங்களின் பருவபூசை அருளூறு பூசனைப் பொருள்களை பெற்றுக் கொள்ளுமாறு செய்யுங்கள். பொதுவாக உங்களிடம் கேமரா ரிப்பேருக்காக வருபவர்களில் ஏறத்தாழ அனைவரும் அன்றுடம் காப்பி செலவாக பத்து, பதினைந்து ரூபாய் செலவு செய்பவராக, திரைப்படத்திற்கென்று பத்து ரூபாய் செலவு செய்பவராக இருப்பார்கள். எனவே, இவர்களில் யாரும் பூசைக்கு ரூ.2/- தருவதற்கு யோசிக்க மாட்டார்கள், தயங்க மாட்டார்கள், சிரமப்பட மாட்டார்கள்.

இன்னும் சொல்லப் போனால், தாங்கள் நினைத்தால், விரும்பிக் கேட்டால் உங்களுடைய வாடிக்கையாளர்கள் ஒரு வருடத்திற்கு நடத்தக்கூடிய பூசைச் செலவுக்காக ரூ.24/- மொத்தமாகத் தரவும் தயங்க மாட்டார்கள். எனவே, நீங்கள் நமது உறுப்பினர் அட்டையைப் பயன்படுத்தி மாதாமாதம் ரூபாய் 2/- தரக்கூடியவர்களைப் பதிவு செய்திடலாம். ஏனென்றால், மாதாமாதம் சந்தா ரூ. 1/- என்று கேட்டால் தரத் தயங்குவார்கள். ஆனால், பருவபூசைக்கென்று செலவுக்கு ஒரு நபருக்கு ரூ. 0.50 + அஞ்சல் செலவு ரூ. 0.50 + இயக்கச் சந்தா ரூ. 1.00 = ரூ. 2/- வாங்கிடுவீர்களேயானால் உங்களுடைய பிறம்மயோகிப் பயிற்சி நிலைக்கு உரிய ஆயிரம் பேர்களை சேர்ப்பதை

சுலபமாக்கி விடலாம். இதே நேரத்தில் இயக்கத்திற்கு சந்தாதாரர்களாக 1000 பேர்களேயும் சேர்த்திடலாம். இதற்கு மேலும் சேர்க்கலாம்.

எனவே, இ.ம.இ. பயிற்சி மன்ற அமைப்பாளர் அட்டையைப் பயன்படுத்திக் கட்டாயமாக உறுப்பினர்களைச் சேர்க்க ஆரம்பியுங்கள். இதற்கு M.C.இராமனும், செகதீசனும், தயாளனும் முழுமையாக ஒத்துழைப்புத் தருமாறு இதனையே குருவாணையாக அனுப்புகின்றோம். இதை அவர்களிடம் காட்டுங்கள். எமக்கும் பல நகல்கள் அனுப்புங்கள். திருச்சி, தஞ்சை, சிறுமுகை, சேலம் வட்டாரங்களுக்கும் இதன் நகல்களை அனுப்புங்கள்.

7) இதை ஒரு சுமையாகவோ, தங்களின் தொழிலுக்கு ஊறு விளைவிப்பவையாகவோ கருதி விட வேண்டாம். **நமது பண்பாடு, இனம், மொழி, நாகரீகம், பண்டைய சிறப்புகள், தமிழின விடுதலை, ... முதலியவைகளில் ஆர்வமுள்ளவர்களை நமது மதத் துறை பற்றிச் சிந்திக்குமாறு அழைக்க இந்த வாய்ப்பு பயன்படும்.** அது போதும்.

8) பேரார்வத்துக்கும், பேராற்றலுக்கும் உரியீர்! ஐயா! நம் நாட்டில் ஏறத்தாழ பெரும்பாலான மக்கள் அறிந்தோ, அறியாமலோ, புரிந்தோ, புரியாமலோ, விரும்பியோ, விரும்பாமலோ அடிக்கடி திருநீறு குங்குமம் பூசுபவர்களாகவும், சாமி படங்களையோ கோயில்களையோ பார்த்தவுடன் கும்பிடுபவர்களாகவும், சாத்திர சம்பிறதாயச் சடங்குகளைக் கடைப்பிடிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். அதாவது, இவர்களுக்கு கடவுளிடம் அச்சமும், மதத்திடம் நம்பிக்கையும் இருக்கிறது.

ஆனால், இவர்கள் விஞ்ஞானப் போக்கிலும், பகுத்தறிவு நோக்கிலும், வரலாற்று அடிப்படையிலும் கடவுள்களைப் பற்றி, மதங்களைப் பற்றி, மத இலக்கியங்களைப் பற்றி, மதப் பெரியார்களைப் பற்றித் தெரிந்து கொள்ளத் தயாராக இல்லை, தயாராக இல்லை, தயாராக இல்லை, தயாராகவே இல்லை. எனவேதான், இந்து மதத்துக்கென்று இயக்கங்களோ,

கழகங்களோ, தலைவர்களோ, ஆச்சாரியார்களோ, மடாதிபதிகளோ, பீடாதிபதிகளோ முறையான, நிறைவான நிறுவன நிர்வாகங்களை உண்டாக்க முடியவில்லை.

இதனை உணர்ந்துதான் கி.பி. 1772இல் தோற்றுவிக்கப்பட்ட இ.ம.இ.யும், அதன் கிளை அமைப்புகளும் 200 ஆண்டுகளுக்கு மேலாகியும், இப்போது ஓர் அரசாங்கப் பதிவு இயக்கமாக ஆக்கிச் செயல்படப் புறப்பட்டிருக்கிறோம். பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய யாம், இதற்காக ஆயிரக்கணக்கில் இளைஞர்களை உருவாக்கியிருக்கிறோம். நூற்றுக்கணக்கில் நூல்களை எழுதிக் குவித்திருக்கிறோம். பலநூறு வகை அறிக்கைகளை அச்சிட்டிருக்கிறோம். ஐம்பதுக்கும் பக்கமாக சிறுசிறு அறிக்கைகளை அச்சிட்டிருக்கிறோம். இவற்றைப் பயன்படுத்தி வாராவாரம் கருத்து விளக்கம், கொள்கை விளக்கம், இயக்கச் செயல்முறை விளக்கம் முதலியவை வழங்கிடுவீர். M.C.இராமனை அடிக்கடி வாரம் ஒருமுறையாவது உங்களது வாடிக்கைக்காரர்களிடம் சொற்பொழிவாற்றச் சொல்லுங்கள். சிந்தியுங்கள், செயல்படுங்கள், வெற்றி பெறுங்கள்.

அன்பு

**குருதேவர், குவலய குருபீடம்,**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரர்.**
11-8-86.

**<u>நகல் எடுத்தவர்:-</u>** வைரநகைகள், வாகனவசதிகள், ஏவலாட்கள் ஏற்படக் கூடிய யோகம் உள்ளவள் என்றும் சித்தர்மகளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சுமதியின் கணவர் சித்தரடியான் இரா.அருணசலம், அருள்மிகு நஞ்சாயி அம்மன் சன்னிதானம், எம்.ஜி.ஆர். நகர், ந.மீனாட்சிபுரம், அண்ணா மாவட்டம்.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு இரா.அருணசலம் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# குறளியம் பத்திரிகைக்கு எழுதப்பட்ட மடல்

வேம்படிதாளம்,
15-9-1986.
நள்ளிரவு 11.00 மணி.

ஓம் எல்லாம் குருவின் செயலே!

**கருத்து விளக்க சிந்தனைக்குரிய கண்டிப்புத் திருவோலை.**

பேரன்பும் பெருமதிப்பிற்குமுரிய உயர்திரு குறளியம் ஆசிரியர் திரு வேலா. இராசமாணிக்கம் அவர்களுக்கு;

பயிரினத்திற்கும், உயிரினத்திற்கும் மூலக்கருவான தமிழினத்தை உருவாக்கிய **சித்தர்நெறி** என்ற இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் சேலம் மாவட்டத் தலைமையகம் சார்பாக எழுதும் **க.வி.சி.க.தி.**

1) அனைத்தும் குருவின் செயலே!

2) ஐயா! வணக்கம். நலம். நலமறிய ஆவல்.

3) ஐயா! குறளியத்தின் ஆசிரியர் குழுவிற்கும், குறளிய தலைமைக் குழுவினருக்கும், குறளிய செயற்குழுவினருக்கும், குறளிய சந்தா (வாசகர்) தாரர்களுக்கும், ... மற்ற அனைத்து தரப்பினருக்கும் இந்து மறுமலர்ச்சி இயக்கம், அருட்பணி விரிவாக்கத் திட்டம் மற்றும் இதன் 12 கிளை அமைப்பின் சார்பாகவும்; அனைத்து சித்தரடியான், சித்தரடியாள், சித்தரடியார்கள் சார்பாகவும்; பேரருள்மிகு இந்துமதத் தந்தை, குவலய குருபீடம், ஞானச்சாரியார், அருளாட்சி நாயகம், அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,

பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரர் ‘குருதேவர்’ அவர்கள் சார்பாகவும் எங்களது அன்பான வாழ்த்துக்களை தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

4) அன்புடையீர்! தமிழின் உரிமையையும், பெருமையையும், பேராற்றலையும், பழம்பெரும் வரலாற்றினையும் மிகத் தெளிவாக சான்றுகளுடனும், ஊன்றுகளுடனும் எடுத்துக் கூறுகின்ற நமது குருதேவரின் கருத்துக்களை வெளியிட நாளேடுகளோ, வார ஏடுகளோ, மாத இதழ்களோ, பிற பதிப்பகங்களோ முன்வராத காரணத்தினால்; இந்து மறுமலர்ச்சி இயக்கத்தினரும், அருட்பணி விரிவாக்கத் திட்டத்தினரும், சித்தர்நெறி ஆர்வலர்களும், ஆதரவாளர்களும் தமிழுக்கு ஏற்பட்டுள்ள பழிநிலையை, அழிநிலையை, இழிநிலையை விளக்கிடுவதற்காக இந்தக் கருத்து விளக்க சிந்தனைக்குரிய கண்டிப்புத் திருவோலை எழுத நேரிட்டது.

5) தொல்பொருள் ஆராய்ச்சியாளரான மதிப்பிற்குரிய திரு தேவநேயப் பாவாணர் அவர்கள் நமது குருதேவருடன் கடைசிவரை தொடர்பு கொண்டு, உண்மைகளைத் தெளிந்து, நன்மைகளைப் புரிந்து மகிழ்ந்தார் என்பதை இங்கு நினைவுகூர்கிறோம். பகுத்தறிவுவாதிகள் தமிழை வளர்க்கவோ, பாதுகாக்கவோ இயலாது. நாத்திகர் என்பதால் சமய உணர்ச்சியை (மத உணர்ச்சியை) தங்களுக்கு ஆதரவாகப் பெறவே முடியாது. தமிழ்நாடு தனிநாடு என்ற எண்ணம் உடையவர்கள், திராவிட நாடு தனிநாடு என்ற எண்ணம் உடையவர்கள் (பிரிவினைக் கருத்து உடையவர்கள்), அகில இந்திய அரசியல்வாதிகள் ஆகியோரின் அரசியல் உணர்ச்சியையோ; அல்லது ஏக இந்தியர் என்ற மயக்கத்தில் இருக்கக்கூடிய அரசியல்வாதிகளின் அரசியல் உணர்ச்சியையோ தங்களுக்கு ஆதரவாகப் பெறவே முடியாது.

இதேபோல் இந்திய சமுதாயத்தின் மேட்டுக்குடிகளாகவும், ஆச்சாரியார்களாகவும், பூசாறிகளாகவும், சாத்திரிகளாகவும்,

பகுத்தறிவுவாதிகளுக்கு எதிரிகளாகவும் இருக்கின்ற இந்த ஆரியமாயையிலும், சமசுக்கிருத பத்தியிலும், வேதநாகரீக அடிமைப் புத்தியிலும் வாழுகின்ற அகில இந்திய சமுதாயத்தில் வாழுகின்ற மக்களின் சமுதாய உணர்ச்சியையும் உங்களுக்கு ஆதரவாகப் பெறவே முடியாது.

ஆக 'தமிழ் வாழ்க!' 'திருவள்ளுவர் வாழ்க!' 'பகுத்தறிவு வாழ்க!' என்று மட்டும் சொல்லக்கூடிய குறளியம் போன்ற எந்த அமைப்பாலும் பெருவாரியான தமிழ் மக்களின் சமய உணர்ச்சியையோ (Religious Feeling), சமுதாய உணர்ச்சியையோ (Social Recognition), அரசியல் உணர்ச்சியையோ (Political Favourable Acceptance) ஆதரவாகப் பெற முடியாது, பெற முடியாது, பெற முடியாது, பெறவே முடியாது.

எனவே, மேற்கூறிய சில வகையான உணர்ச்சிகளையும் ஒருங்கே தன் பக்கம் திரட்டிடக் கூடிய தத்துவ நாயகர், ஆன்மீகத் தலைவர், அருளுலக ஆச்சாரியார், ஞானத்தந்தை, இலக்கியக் கலைஞர், சமய ஞானி, சமுதாய வழிகாட்டி, அரசியல் வித்தகர், அருளுலகச் சித்தியாளர், புதுமை விரும்பி, புரட்சி உணர்வின் ஊற்று, ... என்ற தகுதிகளைப் பெற்று விளங்கும் தமிழின மூலத் தத்துவப் பாரம்பரிய வாரிசு, 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார், குவலய குருபீடம், அரசயோகி, அருளாட்சி நாயகம், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், இந்துமதத் தந்தை, தமிழ்ப் பேராசிரியர் அவர்களால்தான் முடியும்.

எனவே, மனித சமுதாயத்தின் உயிர்நாடியான மதத்துறையை மறுத்தோ, வெறுத்தோ, எதிர்த்தோ, பகைத்தோ, நகைத்தோ செயல்படக் கூடிய எந்த அமைப்பாலும் நாடு தழுவிய முழுமையான வெற்றியைப் பெறவே முடியாது. வேண்டுமானால், நாங்களும் இருந்தோம், செயல்பட்டோம் என்று தனிமைப்பட்ட நிலையில் நினைவுச் சின்னங்களை

நிறுவிச் செல்பவர்களாகத்தான் தங்களைப் போன்ற நிறுவனங்களும், தலைவர்களும் இருக்க முடியும். அப்படி இல்லாமல் சமுதாயத்திற்கென்று எதையும் சாதித்து கொடுத்தவர்களாக மாற முடியாது. தங்களைப் போன்ற நிறுவனங்களும், இயக்கத்தவர்களும் மேற்கூறிய நிலைகளைத்தான் பெற முடியும்.

6) உங்கள் காலத்தில் வாழுகின்ற தமிழ் மொழித் தலைவர், தமிழினத்தின் தலைவர், தமிழ் நாட்டின் தலைவர், தமிழர் மதத்தின் தலைவர், தமிழ்ப் பண்பாட்டின் நாயகர் என்ற நமது குருதேவர் அவர்களை இருட்டடிப்பு செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தமிழ் இன மொழி பண்பாட்டு துரோகிகள், விரோதிகள் போலத்தான் நீங்களும் செயல்படுகிறீர்கள். எங்கள் குருதேவரை இருட்டடிப்பு செய்து வரும் கருத்துக் குருடர்களையும், கருத்துத் திருடர்களையும் போலத்தான் தாங்களும் செயல்படுகிறீர்கள்.

மூன்று (3) ஆண்டுகளுக்கு மேல் நிகழ்ந்து வருகின்ற, வெற்றிநடை போடுகின்ற, வீரநடை போடுகின்ற எங்களது மாத இதழ் குருதேவர் அறிக்கையினை ஏன் உங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. **தமிழ்மொழிக்கு தெய்வீக ஆற்றல் இருக்கிறது. இதுதான் உலக மொழிகளுக்கெல்லாம் தாய்; உலக மதங்களுக்கெல்லாம் அடிப்படை** என்ற பேருண்மையை செயல்வடிவில் விளக்கிட நாடெங்கும் அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையங்கள் அமைத்தும்; பல்லாயிரக் கணக்கான அடியான்களையும், அடியாள்களையும், அடியார்களையும் உருவாக்கி தமிழ் மக்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும், வாழ்வியல் நடைமுறைகளிலும் தமிழைப் பேரொலியாக, அருட்பெருஞ்சுடராக நிலைபேறு பெறச் செய்து வரும் எங்கள் குருதேவரின் சாதனைகளையும், போதனைகளையும் மறந்து, துறந்து, ஒதுக்கி, பதுக்கி, விலக்கிக் கண்மூடித்தனமாகச் செயல்படுவது ஏன்?

தந்தை பெரியாரின் பெயரையோ, தமிழின் பெயரையோ, தமிழரின் பண்பாட்டுப் பெயரையோ, தமிழின ஒற்றுமை அல்லது ஒருமைப்பாட்டுக் கருத்தையோ நேரடியாக விளக்கியுரைத்து வளவளர்ச்சி அடையுமாறு செய்து வருகின்ற எங்களது குருதேவர், தலைவர், பேராசிரியர், ஞாலகுரு சித்தர் கருவூருரை உங்களைப் போன்றவர்கள் ஏற்றுப் போற்றி; தமிழர்களால் உணர்ந்து வழிகாட்டிகளாக ஏற்கின்ற நிலையைத் தோற்றுவிக்கா விட்டால் நீங்கள் நீராடப் போய் சேற்றைப் பூசிக் கொண்டு வருவது போலவேயாகும்.

7) திருவள்ளுவரை மெய்யான கண்ணோட்டத்தில் விளக்கி நாங்கள் வெளியிட்ட குருதேவர் அறிக்கை எண் 19 உங்கள் கண்களைத் திறக்கவில்லையா? நீங்கள் திருவள்ளுவரை உங்களுடைய அறிமுகத்திற்காக ஒரு சாதனமாகத்தான் பயன்படுத்தி வருகிறீர்கள். திருக்குறளின் பெயரால் ஒரு பொழுதுபோக்கு கழகமாக (Recreation Club) நடத்துவதுதான் உங்கள் நோக்கமா? குறளியமோ அல்லது குறளாயமோ ஒரு பேரியக்கமாக வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் இருக்குமானுல் நீங்கள் வாழுகின்ற காலத்து தமிழர்களின் சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கிய, தொழில் துறைகள் அனைத்தும் புத்துணர்ச்சியும், கிளர்ச்சியும், வளவளர்ச்சியும், ஆட்சிமீட்சியும் பெறச் செய்யக்கூடிய பேராற்றல்மிக்க எங்கள் தலைவரை கண்டுகொள்ளாமல் கள்ளர் கூட்டம்போல் ஒதுங்கியும், பதுங்கியும் நீங்கள் செயல்பட்டு வருவது ஏன்? உங்கள் இயக்கத்தவர்கள் எங்களைச் சந்திக்க வரத் தயாரா? அல்லது எங்கள் இயக்கத்தவர்கள் உங்களைச் சந்திக்க வரலாமா? மனிதர்களைச் சந்திக்க பயந்தால் இலவச வெளியீடு முதல் 10 காசு விலையிலிருந்து 10 ரூபாய் வரை வெளியிடப்பட்டுள்ள எங்களது வெளியீடுகளையாவது சந்திக்கத் தயாராகுங்கள்.

8) உங்களை நிந்திப்பது எங்களது வேலையல்ல. உங்களைச் சிந்திக்கச் செய்வதே எங்களது வேலை. உங்கள் காலத்தின் நிகழ்கால சிந்தனையாளன் (The Contemporary Thinker) எங்களது தலைவன் என்பதை மீண்டும் உங்களுக்கு நினைவுபடுத்துகிறோம். தமிழினத்தின் தன்மானம் காத்த மாவீரர், பகுத்தறிவு பகலவன், சிந்தனைச் சிற்பி, புதுமை நாட்ட அருவி, சீர்திருத்தச் செம்மல், சுயமரியாதை இயக்கம் கண்ட தமிழினத் தந்தை, சிறைக்கஞ்சாச் சிங்கம், வெண்தாடி வேந்தர், தந்தை பெரியார் ஈ.வெ.ரா.வை விட நீங்கள் பெரிதாகச் செயல்படப் போவதில்லை, செயல்படப் போவதில்லை, செயல்படப் போவதில்லை.

அதே சமயத்தில், ஆடிக்காற்றில் அம்மிக் குழவி பறப்பது போல் பெரியாரின் தொண்டும், கருத்தும், கழகமும் தேய்ந்து, ஓய்ந்து, மாய்ந்து வருகின்றன. அவற்றைப் பாதுகாக்க 'தந்தை பெரியார் திராவிடர் கழகம்' என்று எங்கள் தலைவர், பகுத்தறிவு இயக்கத்தை அமைத்து தமிழ்மொழி, இன, நாட்டுப் பாதுகாப்புக்களையும் செய்து வருகிறார். எங்களைப் போன்ற ஆயிரமாயிரம் இளைஞர்களால் அவரின் நா அசைந்தால் நாடே அசையும். தமிழினத்திற்காக குருதி மழை பெய்ய வைக்கவோ, குருதி ஆறு ஓட வைக்கவோ, மனித சடலங்களையே செங்கற்களாக்கி அரண் கட்டவோ வலிமையும், வளமையும், செயல்திட்டமும் உடைய எங்களது தலைவரைப் புரிந்து கொள்ள வருக! வருக!! வருக!!!

9) *தமிழ் வாழ்க* என்று உதட்டளவில் முழக்கமிடும் போலியல்ல, கூலியல்ல, கோழையல்ல, அடிமையல்ல, சந்தர்ப்பவாதி அல்ல; குறுகிய போக்குடைய சுயநலவாதியுமல்ல எங்களது தலைவர், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார். <u>தமிழ்மொழி வளர்ச்சி ஒன்றுதான் தமிழினத்தை ஒற்றுமைப்படுத்தி, ஒருமைப்படுத்த முடியும்</u> என்பதை உணர்ந்த ஒரே ஒரு தலைவர் எங்களது

குருதேவர். தமிழ்மொழியின் உணர்ச்சியே தமிழர்களுக்கு விழிச்சியை, எழுச்சியை, செழிச்சியை, மலர்ச்சியை, வளவளர்ச்சியை, ஆட்சிமீட்சியை உருவாக்கிடும், உருவாக்கிடும், உருவாக்கிடும் என்பதை தத்துவமாகக் கொண்ட சித்தர்நெறி என்ற இந்துமதத்தின் நெடிய பெரிய பாரம்பரியத் தலைவர்தான் எங்களது குருதேவர்.

இன்றைய நிலையில் இந்த மண்ணுலகில் ‘கேள்வி கேளுங்கள், பதில் கூறுகிறேன்’ என்று கூறக்கூடிய ஒரே ஒரு தத்துவத் தலைவர், கொள்கைப் பேராறு, குறிக்கோள் மலை, செயல்நிலைப் பெருங்கடல்தான் எங்களது குருதேவர். உங்களைப் போன்றவர்கள் நிகழ்த்துகின்ற விழாக்களுக்குக் கூட அவருக்கு அழைப்பினைக் கொடுக்காமல் கருத்துக் குருடர்களாக செயல்படக் கூடிய உங்களை எப்படித்தான் திருத்துவது என்றே தெரியவில்லை. அவரைப் பார்க்கவோ, அவரைச் சந்திக்கவோ பயப்படுகிற நீங்கள் பட்டப்பகலில் கண்ணை மூடிக்கொண்டு வாழ்வது போலத்தான். அன்புகூர்ந்து ஏமாறாதீர்கள், ஏமாற்றாதீர்கள்.

*ஹிந்து மதம்*தான் பார்ப்பனர்களது. **இந்து மதம்** தமிழருடையது. இந்து மதத்தில் உள்ள தத்துவ இலக்கியங்கள் முழுக்க முழுக்க தமிழில்தான் இருக்கின்றன. நவநாத சித்தரான திருவள்ளுவர் (வேத சித்தர்) சித்தர்நெறி யெனும் கடலில் மூழ்கி முத்தெடுத்தவர்தான். நீங்களோ கடலே தேவையில்லை. ஆனால், முத்து வேண்டுமென்கிறீர்கள். இதை பித்துக்குளித்தனம் என்பதா? பைத்தியக்காரத்தனம் என்பதா? அன்பு கூர்ந்து இந்த இருபதாம் நூற்றாண்டை வீணாக்காதீர்கள். இருபதாம் நூற்றாண்டில் இனிமேலாவது தமிழின இயக்கங்களும், கழகங்களும் ஒற்றுமையின்றி பிரிந்து தனித்தனியாக செயல்பட்டு காலத்தையும், கருத்தையும், முயற்சியையும் வீணாக்க வேண்டாம் என்பதே எங்களது தாழ்மையான வேண்டுகோள். அன்புகூர்ந்து எங்களது இந்த உணர்வுப் பூர்வமான அஞ்சலால் மனம் புண்பட்டு

விட வேண்டாம். தமிழின் மேலுள்ள பற்றினுல்தான் பதைபதைப்போடு இந்தக் கண்டிப்பு அஞ்சலே அனுப்புகிறோம்.

தந்தை பெரியாரைப் போல ஈரோட்டில் உள்ள தாங்கள் தமிழ்மொழிக்காகவும், இனத்திற்காகவும், தமிழரின் தன்மானத்திற்காகவும், தமிழின விடுதலேக்காகவும் காகிதப்போர் (The Paper Revolution; The Manuscript Revolution; The Ideological Revolution; The Cultural Revolution, ... etc) செய்யப் புறப்பட்டு இருக்கும் எங்களோடு இணேந்து செயல்பட வாருங்கள். நாங்கள் உங்களேச் சந்திக்க வருவதா? அல்லது நீங்கள் எங்களேச் சந்திக்க வருவதா? என்று முடிவு செய்யுங்கள்.

10) பேரன்புடையீர்! பேரார்வத்தோடு திருவள்ளுவர் பெயரால் தமிழ் உணர்ச்சியை, தமிழ் வளர்ச்சியை, தமிழ் ஆட்சிமீட்சியை முறைப்படுத்த வேண்டுமென்றும், நிறைவுபடுத்த வேண்டுமென்றும் கங்கணம் கட்டிச் செயல்படும் உங்களே இளேஞர்களாகிய நாங்கள் போற்றுகிறோம், பணிகிறோம், ஏற்கிறோம். நம்மைப் போன்றவர்கள் இணேந்து செயல்படும் பொற்காலம்தான் உண்மையிலேயே தமிழருக்கு நல் வாழ்வையும், வள வாழ்வையும், வலிமை வாழ்வையும், ஆட்சிமீட்சி வாழ்வையும் வழங்கிட முடியும், வழங்கிட முடியும், வழங்கிட முடியும்.

11) நாடெங்குமுள்ள திருவள்ளுவரின் பெயரால் உள்ள இயக்கங்களேயும் நிறுவனங்களேயும், திருக்குறளின் பெயரால் உள்ள இயக்கங்களேயும் நிறுவனங்களேயும் ஒன்றுதிரட்டி, ஒற்றுமைப்படுத்தி; தத்துவத் தரமும், செயல்திறமும், இயக்கக் கட்டுக்கோப்பும், பொதுமக்களின் அறிமுகமும் உடைய எங்களது தலேவரைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். பல்வேறு காரணங்களால் இவர் இலேமறைகாயாகவே செயல்பட்டு வருகிறார். மிகமிக நுட்பமான ஒளியும், சத்தியும் கொண்டு தமிழ்மொழிக்கும், இனத்திற்கும் அரியணே

உருவாக்கி வருகிறுர் எங்களது குருதேவர். இந்த நிலேயான கலேப்பணியில் நீங்களும் பங்கு பெறுங்கள்.

12) தமிழகத்திலுள்ள சமய, சமுதாய, அரசியல், இலக்கிய, தொழில் இயக்கங்களுக்கிடையில் ஒற்றுமையே இல்லே, ஒருமைப்பாடே இல்லே. இதனுல்தான் தமிழன் தனது தாய்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி; கூலியாக, கேலிக்குரிய பிறவியாக, அன்னியர் வேலியாக, தாய்நாட்டு உணர்வில்லாத போலியாக, கூலி கொடுப்பவர்களுக்கு எடுபிடியாக, கண்டவர்க்கெல்லாம் கட்டியம் கூறும் கங்காணியாக, தன்னுடைய இனத்தவரை மட்டும் மதிக்காத ஈனப்பிறவியாக (நாயாக), ரொட்டித் துண்டுக்கு வாலாட்டுகின்ற ஈனப்பிறவியாக (நாயாக), பிறருக்கு காவடி தூக்கவும், கூசா தூக்கவும், கால் பிடிக்கவும், செருப்பு தூக்கவும் தயாராக இருக்கின்ற தன்மானமற்ற கோழையாக; அன்னியரையே தலேவராகவும், வழிகாட்டியாகவும் ஏற்கின்ற தன்னம்பிக்கை இல்லாத மோழையாக; இன உணர்வோ, மொழி உணர்வோ, நாட்டு உணர்வோ இல்லாத அனுதையாக; அச்சமும், கூச்சமும் மிகுந்த பிச்சைக்காரனுக வாழ நேரிட்டு விட்டது. இவற்றையெல்லாம் எண்ணி எரிமலேயென வெடிக்கக் காத்திருக்கும் எங்களேப் போன்ற இளேஞர்கள் உங்களேப் போன்ற ஒற்றுமையுணர்வில்லாத, சுயநல கும்பல்கள் பல ஆட்டுமந்தையை கூறுபோடுவது போல கூறு போட்டே தமிழர்களே வீழ்த்தி இருக்கிறுர்கள் என்பதை உணர்ந்து உங்களே திருத்த முயலுகிறோம். திருந்துங்கள்.

13) "ஏ வீழ்ந்த தமிழகமே, வீழ்ந்து கொண்டிருக்கும் தமிழினமே, வீழ்த்தப்பட்டு விட்ட தமிழ்மொழியே, வீணர்களின் வார்த்தையால் வீணுகிப் போய்க் கிடக்கும் தமிழ்ச் சமுதாயமே! தன் இனமானமும், மொழியுரிமையும், நாட்டுப்பெருமையும் காக்கத் தெரியாத இருட்டு வீட்டு குருட்டுப் பிறவியே! என்றைக்கு நீ திருந்தப் போகிறுய்? உன் தலேவர்கள் பணத்துக்காக, பதவிக்காக, புகழுக்காக பிறரிடம்

தன் இனத்தையும், நாட்டையும், மொழியையும் காட்டிக் கொடுக்கும் துரோகிகளாக, விரோதிகளாக வாழும் நிலையை என்றைக்கு மாற்றப் போகிறாய்?..." என்று எண்ணியும், சிந்தித்தும், பேசியும், எழுதியும் செயல்பட்டு வரும் மானமிகு மாவீரர்களே நாங்கள். எங்களுடைய இளங்குருதியின் வெப்ப ஓட்டத்தைத் தாங்க முடியாமல் வெந்து போய் விடாதீர்கள். நாம் ஒன்றுதிரள்வோம், ஒற்றுமைப்படுவோம், ஒருமைப்படுவோம், திட்டமிட்டு செயல்படுவோம். கட்டுப்பாட்டுடன் ஏட்டுலகையும், நாட்டுலகையும் மறுமலர்ச்சியடையச் செய்வோம். நம்முடைய இலக்கியங்களில் திருக்குறள் மட்டுமல்ல, மற்ற அனைத்து இலக்கியங்களும் நமது நலம் காக்கும் தன்னம்பிக்கை மிக்க, தன்மானப் பற்றுடைய, தன்னலமில்லாத மாவீரன் ஒருவனைக் கூடப் பெற முடியாமல்; நூற்றாண்டுக்கால இடைவெளியில் உருவாக்க முடியாமல் இருக்கின்றன, இருக்கின்றன, இருக்கின்றன.

எனவே, குறளியத்தின் பெருமையைப் பேசி வாழ்நாள் கடத்துவது என்பது விதைநெல்லையே குத்தி (இடித்து) அவலாக்கித் தின்கின்ற பைத்தியக்காரச் செயலைத்தான் செய்வதாகும். குறளியத்தால் தேவையான அளவு இனப் பற்றோ, இன ஒற்றுமையோ, இன விழிச்சியோ, இன எழுச்சியோ, இனக் கிளர்ச்சியோ உருவாக்கி இனவிடுதலைப் புரட்சியை நடத்த முடியவில்லை இதுவரை. எனவே, கண்மூடித்தனமாக குறளியமே வேதம் என்றும், மறை என்றும், நெறி என்றும்; மடமைமிகு மூடநம்பிக்கைக்காரர்கள், மதவெறியர்கள் போல் உளறித் திரிய வேண்டாம். நாம் குறளியத்தைப் பற்றி மறு சிந்தனை செய்தே ஆக வேண்டும். (A Re-thinking about the vitality and usage or the utilitarian view of the divine Thirukkural that can alone give enlightenment of the literate and illiterate society). அதாவது படித்தவர்களையும், படிக்காதவர்களையும் தமிழுணர்ச்சியின் அடிப்படையில் வளர்ச்சிக்குரிய கிளர்ச்சியைப் பெறச் செய்ய வேண்டுமென்றால்; திருக்குறளின் மெய்யான சத்து நிலைகளையும் (கருத்து வளத்தை),

பயன் நிலைகளையும் ஆராய்ச்சி செய்ய வேண்டும் நாம். இதற்கு நாங்கள் தயார். நீங்கள் தயாரா? நண்பர்களே சிந்திக்கக் கற்றுக் கொள்ளுங்கள். நமது சந்திப்பு எப்போது?

14) எங்களது பூசாமொழி புத்தகங்கள் மூலம் ஏறத்தாழ இரண்டரை இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னரே மந்திரங்கள், மந்திறங்கள், மந்தரங்கள், தோத்திரங்கள், தோத்திறங்கள், தோத்தரங்கள், சாத்திரங்கள், சாத்திறங்கள், சாத்தரங்கள், சூத்திறங்கள், சூத்திரங்கள், சூத்தரங்கள், சுருதி ஆரண ஆகம மீமாம்சைகள், நேம நியம நிடத நிட்டை நீதிகள், மறைகள், முறைகள், நெறிகள், வேதங்கள் இருந்திருக்கின்றன. இப்பேருண்மையை சான்றுகளோடும், ஊன்றுகளோடும், செயல்நிலைகளோடும், பயன்நிலைகளோடும் விளக்கி உரைக்கிறது இந்தப் பூசாமொழிப் புத்தகம். இதுதான் மனிதர்களுக்குரிய ஆன்மீகப் பசியை, அருளுலக ஏக்கங்களை, வாழ்வியல் தேக்கங்களை தமிழ்மொழியின் மூலம் நீக்கிக் கொள்ள முடியும், போக்கிக் கொள்ள முடியும், அகற்றிக் கொள்ள முடியும், விருப்பம் போல் மாற்றிக் கொள்ள முடியும் என்ற பேருண்மையை விளக்குகிறது.

அதாவது தமிழ்மொழிதான் தேவமொழி, தெய்வமொழி, கடவுள்மொழி, பூசைமொழி, அமுதமொழி, உயர்நிலைச் செம்மொழி, மண்ணுலக இனத்திற்கு உயர்வும் உய்வும் அளித்த மொழி என்ற பேருண்மையை விளக்குகின்ற இப்படிப்பட்ட அரிய நூல் போல் எண்ணற்ற நூல்கள் முதலில் தமிழர்களுக்காவது அறிமுகம் ஆக வேண்டும். அப்பொழுதுதான் தமிழனுக்கு தங்களுடைய தாய்மொழியிடத்து நம்பிக்கையும், பற்றும், பாசமும் ஏற்பட்டிடும். அதன் அடிப்படையில்தான் தன்மானம், இனமானம், மொழியுரிமை, இன விடுதலை, இன ஒற்றுமை, இன ஒருமைப்பாடு; அதன் அடிப்படையில்தான் உலகத் தமிழர்களின் இணைப்பு முதலியவை உருவாகும், உருவாகும், உருவாகும்.

திருக்குறள் என்ற தனியொரு நூலின் பெயரைச் சொல்லியோ, திருவள்ளுவர் என்ற தனியொரு புலவரின் பெயரைச் சொல்லியோ தமிழரை ஒற்றுமைப்படுத்தல், ஒன்றுபடுத்தல், விழிச்சி எழிச்சி செழிச்சி அடையச் செய்தல் என்பது இயலாத செயல், இயலாத செயல், இயலாத செயல், இயலவே இயலாத செயல். இதைப் புரிந்து திருவள்ளுவருக்கும், திருக்குறளுக்கும் மூலமாக, தாயாக, கருவாக இருக்கின்ற சித்தர்நெறியை, இந்துமதத்தை அனைத்து வகையான சித்தர்களை விளக்க, வளர்க்க முற்படுங்கள், முற்படுங்கள், முற்படுங்கள்.

15) பேரன்புடையீர்! தனிமரம் தோப்பாகாது என்பதுபோல தங்களின் குறளியம், குறளாயத்தினால் மட்டுமே தமிழ்ச் சமுதாயத்தைத் திருத்த முடியாது, முடியாது, முடியாது, முடியவே முடியாது என்பதைத் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுக் கொள்கிறோம்.

இப்பதினான்கு பக்க நீண்ட அஞ்சலை பலமுறை படித்துப் புரிந்து தெளிந்து அறிந்து செயல்படுங்கள்.

**<u>குறிப்பு</u>**:- இவ்வஞ்சல் மூலம் தமிழின் மேல் பற்றுள்ள, பாசமுள்ள, ஆர்வமுள்ள, விருப்பமுள்ள, 'தமிழ்தான் எல்லாம்' என்று கூறுகின்ற அமைப்பு, சங்கம், இயக்கம், கழகம், கட்சி, சபை, மன்றம், குழு, ... முதலிய அனைத்திற்கும் வேண்டுகோள் விடுக்கின்றோம். இனிமேலாவது ஒன்றிணைந்து, ஒற்றுமையுடன்; தமிழ்மொழி, இன, நாடு மற்றும் உலக மக்களின் நலத்திற்கும் பாடுபடுவோம் என அனைவரையும் வாரீர்! வாரீர்! வாரீர்! என்று இந்து மறுமலர்ச்சி இயக்கம் மற்றும் அதன் 12 கிளை அமைப்புக்களின் சார்பாக அழைப்பு விடுக்கின்றோம். இதில் வெறியர்களும், தன்னல வெறியர்களும், பேராசை பிடித்த பேய்களும், தமிழைக் காட்டிக் கொடுக்கின்ற துரோகிகளும், சுயநலக்காரர்களும் இணைந்து செயல்பட முற்பட மாட்டோம் என்பதையும் இங்கு தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டுக் கொள்கிறோம். சிந்தித்துச் செயல்படுங்கள்.

**<u>சிறப்புக் குறிப்பு</u>**:- இவ்வஞ்சலின் நகல்கள் முக்கியமான தலைவர்களுக்கும், செய்தியேடுகளுக்கும், முக்கியமான நபர்களுக்கும், ... அனுப்பப்படுகின்றது.

வாழ்க தமிழ்! வளர்க சித்தர்நெறி!
அன்பே சிவம்!
ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்.

**அன்பு**

**சித்தரடியான் சீ.மணி.**
**வேம்படிதாளம் கிளை,**
**இந்து மறுமலர்ச்சி இயக்கம்.**

1. அருள்மிகு வேம்படிதாளம் காமகோடி பீடாதிபதி, பெரியவாள், மகேசுவர ஆச்சாரியார், கபாலீசுவரி சன்னிதானம், சித்தரடியான் சீ.மணி, வேம்படிதாளம், சேலம் மாவட்டம்.

2. சேலம் மாவட்ட இ.ம.இ. செயலாளர், அருள்மிகு கஞ்சமலை காளாங்கிநாதர் சன்னிதானம், சித்தர் மகன் இல.க. கணேசன், மெயின்ரோடு, வேம்படிதாளம் அஞ்சல், சேலம் மாவட்டம்.

3. சேலம் மாவட்ட இந்து மறுமலர்ச்சி இயக்கப் பொருளாளர், அருள்மிகு வேம்படிதாளம் சுடலைக்காரி சன்னிதானம், சித்தரடியான் இரா. வெங்கடேசன் B.Sc., M.A., வேம்படிதாளம் அஞ்சல், சேலம் மாவட்டம்.

4. அருள்மிகு சேலம் கோட்டை மாரியம்மன் சன்னிதானம், சித்தரடியான் J.Vijayaraghavan, B.Sc., DTVT, LL.B., Vembadith-aalam P.O., Salem District.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# எத்தனைத் தமிழர்களுக்கு இந்த உண்மைகள் புரிந்திருக்கின்றன?!

"... எத்தனைத் தமிழர்களுக்குத் தங்களை நெடுங்காலமாக மாற்றூர்களும், வேற்றூர்களும், அன்னியர்களுமே மறைமுகமாக ஆண்டு வருகிறூர்கள் என்ற பேருண்மை விளக்கமாகி இருக்கிறது?!?!?! ..."

"... எத்தனைத் தமிழர்களுக்குத் தங்களுடைய சமுதாயம் சாதி மத வெறிகளால் குரங்கு கைப் பூமாலை போல் சிதைந்து சீரழிந்து உருக்குலைந்து கிடக்கிறது என்ற உண்மை புரிந்திருக்கிறது?!?!?! ..."

"... எத்தனை யெத்தனை தமிழர்களுக்குத் தங்களுடைய அரசியல் நெடுங்காலமாக அன்னியர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் அடிமைப்பட்டுக் கப்பம் கட்டும் அவலநிலையைப் பெற்றிருக்கின்றது என்ற உண்மை புரிந்திருக்கிறது?!?!?! ..."

"... எத்தனை யெத்தனை தமிழர்களுக்குத் தங்களுடைய சமயமான பதினெண்சித்தர்களுடைய 'சித்தர் நெறியான சீவநெறி' எனப்படும் **'மெய்யான இந்துமதம்'** வேறு; இன்றைக்கு நாட்டில் உள்ள வேதமதக் கலப்புற்ற சமசுக்கிருத மொழி '*ஹிந்துமதம்*' வேறு என்ற தத்துவம் புரிந்திருக்கிறது?!?!?! ..."

"... எத்தனை யெத்தனை தமிழர்களுக்குத் தங்களுடைய மெய்யான பத்தியுணர்வு அன்னியர்களைக் குருவாக, ஆச்சாரியாராக, சாத்திரியாராக ஏற்றுத் தங்களை அடிமைவாழ்வு வாழச் செய்திடுகின்றது என்ற பேருண்மை புரிந்திருக்கிறது?!?!?! ..."

***//1987இல் குருதேவர் அச்சிட்ட அறிவிக்கையில் இருந்த குருபாரம்பரிய வாசகங்களில் சில.//***

***“இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்.”***



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள்** (கி.பி.785 - 1040) ஏறத்தாழ இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் (256) வாழ்ந்திட்டார். இவருடைய போதனைகளில் சில:

*“தமிழரின் மத விடுதலையே!; தமிழின மொழி விடுதலையை உருவாக்கிடும்!”*

***“தமிழரால் தங்களின் மதத்தை மறுத்தோ!, வெறுத்தோ! அன்றி மறந்தோ! துறந்தோ! புறக்கணித்தோ! தங்களுக்குத் தேவையான தமிழின மொழி விடுதலையைப் பெற முடியாது!”***

இவருக்கு அடுத்து சுமார் 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்களின் <u>குருவாணைப்படி</u> இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org https://gurudevar.org
https://induism.org https://books.gurudevar.org

*Email:* indhuism@gmail.com